
# Path to Dharma

## தர்ம நெறி (Dharma Neri)

## 73



Sri Sankar Publications

KshethraVinayaka Temple, Sri Munneswaram,Chilaw, Sri Lanka.

க்ஷேத்திர (வயல்) விநாயக ஆலயம்,ஸ்ரீமுன்னேஸ்வரம், சிலாபம், ஸ்ரீ லங்கா.

Author - B.S.Sarma

January 2014 ஜனவரி (மார்கழி/தை)

**Editorial**

'Path to Darma' the monthly magazine, published by KshethraVinayaka Temple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka, is presenting the 73rd issue this month.The foremost intention of this magazine is to converse the perceptions linked to Hinduism and its ceremonial rituals, customs and dharma, to the anxious readers.The elucidation and investigation from the readers are appreciated.

B.SivaramakrishnaSarma,

KshethraVinayaka Temple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka.,January, 2014

## Opinion

Dear Sarma,

Thank you for the December issue of Path to Dharma (Dharma Neri). It contains a lot useful information on Astrology and philosophy which are very beneficial to all.

Regards,

vseshadri

**அன்புமிக்க சர்மா அவர்களுககு**

**அன்புடன் எழுதிக்கொள்வனஇ தங்களின் 70இ 71 ஆவது தர்மநெறி இதழ்கள் கிடைக்கப்பெற்றேன். மிகவும் நன்றி. இந்து சமய வரலாற்றை தமிழில் தொடர்ந்து தந்து கொண்டு இருப்பதற்கு எனது பாராட்டுக்கள். தமிழை தெரிந்த பலருக்கும் இவ்வராலாற்றுச் சான்றுகள் இங்கு கிடைப்பது அரிதினும் அரிது.அவர்களுக்கெல்லாம் பெரும் பணியை நீங்கள் உங்களின் வெளியீட்டின் மூலம் ஆற்றியிருக்கின்றீர்கள். உங்களின் பணிதொடர எனது வாழ்த்துக்கள். ”வான்முகில் வளாது பெய்க” எழுத்துப்பிழையாகவும்இவாக்கியப்பிழையாகவும்இ அச்சில் வந்துவிட்டது .அதனைக்கவனிக்கவும்.**

**என்றும் அன்புடன்இ**

**அன்பன்**

**மதிப்புக்குரிய சர்மா அவர்களுக்கு வணக்கம்.**


**தங்களின் 72 வது பாததர்மம் வாசித்தேன். “இந்துசமய வளர்ச்சி -இடைக்காலம் நவீனகாலம்” பற்றியதாக அமைந்திருந்தது.“உலகில் தோன்றிய ஒரே கடவுள் கொள்கையுள்ள சமயங்களுள் ..... பல கடவுள் கொள்கை இருந்துவந்தமை... சமய சகிப்புத்தன்மைக்கு, முக்கிய அம்சமாகும்” என்னும் கூற்று யாவரையும் சிந்திக்க வைக்கக்கூடிய உயர் தத்துவ வார்த்தை எனலாம். இதனை தந்தமைக்கு எனது பாராட்டுக்கள்.“இந்துசமய வளர்ச்சி என்பதை முதலில் தோன்றிய மனித நாகரிகத்தின் வளர்ச்சி என இனங்காணலாம்” ... “ சர்வவியாபகமான ஒரு சக்தியாக கடவுள் (பிம்மம்) என்ற எண்ணக் கருவை இந்துசமயம் காட்டியது” .இந்தக் கருத்தை துணிச்சலோடு சொன்னதற்கு மீண்டும் ஒரு பாராட்டு.இந்துசமய இடைக்கால வளர்ச்சியை 1வது 2வது 3வது கட்டமாக பிரித்து அதைப்பற்றிய விபரங்களைத்தந்தமையும் நன்றாக உள்ளது. மோட்சத்துக்கான விளக்கமும், ஆகமத்துக்கான விளக்கமும்இ அருமை. மோட்சத்தோடு பகவத்கீதையினை இணைத்த விதம் மிகவும் அழகு. மொத்தத்தில் இந்துசமயம் இனிக்கிறது. (எழுத்துப்பிழைகள்இ வசனப்பிழைகள், தவிர்த்தால் இனிப்பு இன்னும் கூடும்)**

**அன்புடன்,**

**எம்.ஜெயராமசர்மா, அவுஸ்திரேலியா**

# இந்து சமய காட்டும் கடவுள் உருவங்கள்

அகில பிரபஞ்சமே தெய்வீகத்தின் ஓர் அம்சமாகும். கடவுள் எல்லாவற்றிலும் சான்னித்தியமாக இருப்பதாக இந்துக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஒரே கடவுளின் வெவ்வேறு அம்சங்களை மூர்த்தங்களாகக் கொண்டு இந்து சமயத்தவர் வழிபாடு ஆற்றுகின்றனர். பிரம்மன், விஷ்ணு, சிவன் என்னும் மூர்த்திபேதங்கள். அவை ஒவ்வொன்றையம் ஆயிரம் திருநாமங்கள் சூட்டி வழிபடுபவர்கள் இந்துக்கள். படைத்தல் பிரம்மாவுக்கும் காத்தல் விஷ்ணுவுக்கும் அழித்தல் சிவனுக்கும் உரிய தொழில்களாக புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

இம்மூன்று தொழில்களையும் தொழில்களையும் ஓர் **உருவமாக** மும்மூர்த்திகளும் செய்கிறார்கள். அவர்கள் பரமேஸ்வரருடைய அம்சமாகவே கருதப்படுகின்றனர். அவர்கள் பரமேஸ்வரரிடத்திலிருந்து பிரிந்து நின்று சுயமாகவே இம்முத்தொழில்களையும் செய்ய முடியாதவர்களாக உள்ளனர். பின்வரும் வேதக்குறிப்பில் கடவுளைப் பற்றிய மனத்தில் கற்பித்த உருவாக்கம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

**“ ஓம், பூர்ணமத பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே**


**பூர்ணஸ்ய பூர்ண மாதாய பூர்ணமே வாசிஷ்யதே”**

இதன் பொருள் பின்வருமாறு “ எது முழுமையோ அம்முழுமை முழுமையாததிலிருந்தே தோன்றியது. முழுமையிலிருந்து முழுமையை அகற்றிவிட்டாலும் முழுமை முழுமையாகவே நிலைத்திருப்பதாகும்.“ இவ்வேத மந்திரத்தின் சாராம்சம் கணக்கில் அடங்காத ஒன்றை கணக்கினால் எண்ணிக்கையில் அடங்காத முழுமையை எண் கணித அறிவினால் ஆராய்ந்து கொள்ளமுடியாது. இறைவன் அளவு கடந்து நிலைத்திருப்பவர். கணக்கற்ற ஒன்றை கணக்கற்ற ஒன்றினால்தான் பதிலுக்கு மாற்றீடு செய்ய முடியும். இதுவே கடவுகளைப் பற்றிய இந்து மதத்தின் நம்பிக்கையான கொள்கையாகும். எனவே கடவுள் எங்கும் எதிலும் எம்மைச் சுற்றியுள்ள வெளிப்புறத்திலும் எம்மில் உள்ள சித்தாகாசம் எனப்படும் அகவெளியிலும் நிலைத்து சான்னித்தியமாகவுள்ளார். இந்து சமயம் “நாம் கடவுளே” என கூறுகிறது. அது வேதங்களின் கருத்தாகும். பலதெய்வ வடிவங்களிலும் ஒருதெய்வத்தைக் காணும் உயர்நோக்கு இந்து மதமொன்றிற்கே உரியதாகும். கடவுளின் உண்மையான ரூபத்தை மானிடரால் கண்டு கொள்ள முடியாதென்பதால் அளவற்ற அப்பெரு வடிவத்தினை இந்துசமயம் உருவங்கள் மூலம் கண்டு களிப்படையவும், வேண்டியவைகளைப் பிரார்த்தனையினால் பெற்றுக்கொள்ளவும் வழிகோளியுள்ளமை அதன் தனித்துவமான தன்மையாகும் இந்த

நம்பிக்கை, இந்து சமயத்தை பலதெய்வக் கொள்கையுள்ளதாக நினைக்கும்படி தடுமாற்றமடையவைக்கின்றது. இந்து சமயத்தின் பரம தயாநிதியாகிய பரமேஸ்வரர் தன்மை எப்பரிசாலும் ஏத்திவழிபட அப்பரிசே அருள் செய்து வேண்டிய வரங்களைச் சுரந்தளிக்கும் தனித்தன்மையை தொன்மைமிக்க இந்துமதம் கொண்டிருக்கின்றது.

**சிவலிங்கம்**

"சிவலிங்கம்" என்ற சொல்லுக்கு சிவனின் உடல் சக்தியும் பிரபலமும் பெற்ற குறியீடாகும். சிவன்கோயிலின் மூலஸ்தானத்தில் சிவலிங்கம் தவிர வேறெந்த மூர்த்தங்களும் காணப்படுவதில்லை. சிவலிங்கம் உருளை வடிவமுடையதாகவும் ஆவுடையார் பாகத்தின் மேல் சிறிது உயர்ந்த தூண் போன்றதாகவும் அமைந்திருக்கும். உருளையான பாகம் ஆவுடையாரில் நடுவே வட்டமான குளியில் இறுக்கமாக இணைக்கப்பட்டும் இருக்கின்றமை, மனத்தையும் உடலையும் ஒன்றிணைத்தலைக் குறிக்கின்றது. ஆன்மீக ரீதியில் இந்த அருவுருவாகிய சிவலிங்கம் புருஷ பிரகிருதிகளின் இணைப்பு என விளக்கப்பட்டுள்ளது. இது பிரபஞ்சப்படைப்பின் வியாபகத் தோற்றமாகும்.



இறைவனின் அருவுருவ நிலையைக் குறியீட்டால் உணர்த்தும் தன்மையே இலிங்கம். இதுவெனின் மகேஸ்வரனின் அருவுருவமே இலிங்கம என உண்மை உணரப்படுகின்றது. பிரபஞ்ச உற்பத்தியின் குறியீடாகவுள்ள சிவலிங்கம் மூன்று பாகங்களை உடையது.

சிவலிங்கத்தின் அடிப்பாகம் பீடமாக இருந்து பிரம்மாவையும், எண்கோணவடிவில் அமைக்கப்பட்டிருக்கும் நடுப்பாகம் விஷ்ணுவையும், உருளைப்போன்ற அமைப்புடன் ஆவுடையாரில் நன்கு இணைக்கப்பட்டுள்ள மேற்பாகம் உருத்திரனையும் குறிப்பதாகும். மேற்பாகத்தைப் பூஜாபாகம் எனவும் குறிப்பிடுவர். இதற்கே பால் பஞ்சாமிர்தங்களுடன் அபிஷேகமும், அலங்காரம் ஆராதனை அர்ச்சனைகள் என்பனவும் செய்யப்படுகின்றது. சிவலிங்க ஸ்தாபனம் மூலஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். அதிபுனிதத்தன்மை வாய்ந்ததும், சிவசாந்நித்தியம் கொண்டுள்ளதுமான அருவுருவமாகிய - கன்மசாதாக்கியம் காட்டும் சதாசிவ மூர்த்தமாக, மிகவும் ஆசார அனுட்டானத்தோடு சிவலிங்கம் வழிபடப்படுகின்றது.

சிவலிங்கங்கள் இயற்கையாக நதிதீரங்களிலும், மலை உச்சியின்மேலும் காணப்படுவன. செயற்கையாகவும் பலவகையான பொருட்களாலும் அமைக்கப்படுகின்றன. சிவலிங்கங்களை, களிமண், பொன், பளிங்கு, வைரம், இரத்தினங்கள், மரக்கட்டை என்பவைகளால் அமைத்தல் மரபு. ஆற்று நீரோட்டத்தினால் இலிங்கம் போன்று உருப்பெற்ற கற்களையும் வழிபாட்டுக்கு பயன்படுத்துவர். அவ்வாறான

இலிங்கங்கள் மிகவும் புனிதமானவையாக கருதப்படுகின்றன. சிலசந்தர்ப்பங்களில் மணலாலும், களிமண்ணாலும் சந்தனத்தினாலும் தேவைக்கேற்றவாறு சிவலிங்கத்தை அமைத்து வழிபடுதலும் உண்டு. அவ்வாறு வழிபட்ட லிங்கங்களை, வழிபாட்டின் பின்னர் நீர்நிலையில் விடுதல்முறை. ஆற்றங்கரைகளில் அதிஷ்டவசமாகக் கிடைக்கும் சிவலிங்கங்கள் மிகவும் புனிதமாகையால் நல்ல சகுனத்தையும், வசியும் வளங்களையும் அந்த ஊருக்கு அல்லது கிடைக்கப்பெற்றவர்களுக்கு உண்டாக்குமென்பதால் அத்தகைய சிவலிங்கங்களை ஆலயங்களில் பிரதிஷ்டைசெய்து, நித்திய பூஜைகளை நடாத்தி, சிவனின் திருவருளை பெற்றுச் சிறப்புடன் வாழும் இந்துக்களை காணலாம்.

**சிவபெருமான்**

வேத, உபநிடதங்களில் கூறப்படும் பிரம்மமே சிவப்பெரும்பொருளாகிய பரமசிவம். முத்தொழில்களையும் தமது சக்தியைக்கொண்டு ஆக்கியும், காத்தும், அழித்தும் பின்னர் அழித்தனவற்றை ஆக்கியும், பிரபஞ்ச இயக்கத்தை ஒழுங்காக நடாத்தி வருகின்றது இப்பிரபஞ்சமாம்.

எதிரெதிரான இரு வினைகளாகிய நன்மை தீமையாகிய செயல்களின் நுண்ணிய சமநிலையால் உயர்ந்து மேல் நிலையை எய்தியதும் தாழ்ந்து கீழ்நிலையை எய்தியதுமாகிய பிறவிகளில் உயிர்களைச் செலுத்திப் படைப்பினையும் அதன் பயனாகிய அனுபவத்தினையும் நடாத்திக் கொண்டிருப்பது சிவப்பரம்பொருளே. இச்சமநிலை தவறும் போது உயிர்களின் நல்வினை, தீவினைப்பயன்கள் நடைபெற முடியாதாகையால் சிவபெருமான் பிரளயகாலப் பிரபஞ்ச முடிவை ஏற்படுத்தி, மறுபடியும் அடுத்த யுகத் தொடக்கமாக படைப்பை உண்டாக்குகின்றார். பிறப்பறுப்பினால் தம் வினைப்பயன்களின் அனுபோகமும், சஞ்சல அனுபவமும் முற்றுப் பெறாத உயிர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை இன்னுமொரு முறை அளிக்கும் பொருட்டே சுழற்சிமுறையில் ஒவ்வொரு யுகத்திலும், ஒவ்வொரு சதுர்யுக முடிவிலும் திரும்பவும் பிரபஞ்சத்தைப் படைத்து உயிர்களுக்கு அனுகரண போகங்களை அளித்து அவை இறையுணர்வு பெறும்வரை பிறவிக்கடலில் அழுத்தச் செய்கின்றார். இதனால் உயிர்கள் நன்மை, தீமைகளைத் தொழிலாகக் கொண்டு உலக அனுபவத் தளைகளாகிய கட்டிலிருந்து விடுபட்டு சுயாதீனமடைகின்றன.



வரலாற்று ஆசிரியர்கள், சிவன் வேதகாலத்துக்கு முன்பே பற்பல அற்புத மகிமைகளால், மிகவும் பிரபலமாகி வழிபட்டு வரப்பட்டதனால், வேதகாலத்தில் வழிபட்ட ஏனைய தேவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டு, தேவாதிதேவன், மகாதேவன் என்றெல்லாம் முதன்மை கொடுக்கப்பட்டு வழிபட்டார். இந்து நதிப்பள்ளத்தாக்கில், அக்கால நாகரிகச் சின்னங்களில் ஒன்று எனக் கருதப்படும் யோக முத்திரை

நிஷ்டைநிலையில் இருக்கும் உருவம் சிவனின் உருவத்தைக் குறிப்பதாகவும், (தியானத்தில் கண்டறிந்த சிவனின் தோற்றம்) நகலாகவும் இருப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இருக்கு வேதத்தில் சிவனைப்பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

சைவ சமயத்தின் புகழ் மேலோங்கி வளர்ச்சியடைந்ததால் சிவத்தினை மையமாகக்கொண்டு பற்பல இலக்கிய ஆக்கங்கள் தோன்றிப் பிரபலமடைந்தன. அவைகளுள், ஆகம இலக்கியங்கள் மிகப் புகழ் பெற்றன. சைவ சமயிகளால் ஆகம இலக்கியங்கள், வேதங்களுக்கு இணையானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, சமய வாழ்க்கைக்குப் பேருதவியாக விளங்கின. சிவனின் திருமேனி வெண்மை நிறமாகவும், கண்டம் மட்டும் நீலநிறமுள்ளதாகவும் தோற்றம் பெற்றுள்ளமையும், தமது திருமேனியில் வெண்ணீறு என்னும் பஸ்மத்தை அணிந்து சுடுகாட்டுக்கு அடிக்கடி போவதாகக் காட்டப்பட்டுள்ளது. சிவன் முக்கண்ணனாகவும், நடுக்கண் நெற்றிக்கண்ணாகவும் அது இரண்டு விழிகளின் மத்தியில் இருப்பதாகவும் காட்டப்பட்டுள்ளது. சிவன் தனது நெற்றிக்கண்ணைத் திறந்து உற்றுப்பார்க்கும்போது ஆன்மாக்களின் கணக்கிலடங்காத குற்றங்குறைகளையுடைய தூல சூக்குமதேகத்தின் புனிதத்துக்கு வழிசமைப்பதாகவும், மாயைத்தோற்றங்களில் ஆன்மாக்கள் சிக்காமல் பாதுகாக்கும் எனப்படுகின்றது. தமது கால்களை மடக்கி சப்பாணிக்கொட்டி இருக்கும் நிலையில் தனது கருணையின் வடிவாக உள்ளது எனக் கூறப்படுகிறது. ஆழ்ந்த உள்ளுணர்வுகளே சிவபெருமானின் மூர்த்தங்களும், ஓவியங்களும் சிலைகளும் எம்மிடத்தில் எழுப்புகின்றது. புலித்தோலையும், யானையின் தோலையும் உடுத்தும், போர்த்தும் இருப்பதும் தமது தலையை ஜடாமுடியாக்கி நான்கு திருக்கரங்களில் ஒரு கையில் திரிசூலத்தையும் மறுகரத்தில் தமருகம் (உடுக்கு) தரித்தும் மற்றைய இரு கரங்களும், அபய, வரதஹஸ்த முத்திரைகளைக் காட்டியவாறு சித்தரிக்கப்பட்டுள்ளது.

சைவசமயம் பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருள்களைப் பற்றிக் கூறுகின்றது. பதி, தலைவனாகிய சிவனையும், பசு, மாயை, கன்மம், ஆணவம் ஆகியவற்றால் பிணிக்கப்பட்ட ஆன்மாவையும் இவற்றினால் தனுகரண போகங்களை, அனுபவித்து பிறந்தும், இறந்தும் உழலும் ஆன்மாவையும் பாசம் என்பது, ஆன்மாவைப் பீடிக்கும் உலக பந்தங்களையும் சுட்டுவதாகும். மோட்சம் அல்லது வீடுபேறு - விடுதலை வேண்டுமானால் ஆன்மாக்கள் பற்றறுத்து, இறைவனின் தாழ்களிலேயே சரணாகதி அடைய வேண்டும். பரசிவம் - பரமேஸ்வரன் இரக்கமும் கருணையும் உள்ள பூரணன். காமம், பேராசை, வெகுளி ஆகிய துர்க்குணங்களை அறவே நீக்கி தம் அடியார்களைக் காத்து வருகிறார். சிவபெருமானின் உருவங்கள் சங்கேதக் குறியீடுகளாக இருப்பதால் (பின்னர், அவைபற்றி விளக்கப்படுவதால்) அவற்றினை பொது இயல்பு எல்லா மூர்த்தங்களுக்கும் பொருந்தும் என்பதாலும் சிவன் இந்துகளால் பூஜிக்கப்படுகின்றார்.

முழுமுதற் கடவுளான சிவபெருமானுக்கு மூர்த்திபேத மூலங்கள் பல உள்ளன. சிவன் இன்றியமையாத பல்வேறுபட்ட தொழில்களை ஆற்றவேண்டி அமைவுற்றதால் அவரை ஒருதனித்த

உருவமாக வழிபடுதல் கடினமானதாகக் கருதப்படுகின்றது. அறிஞர்களாலும் தவ சிரேஷ்டர்களாலும் மற்றும் ஆன்மீகத் தலைவர்களாலும் பல மூர்த்தங்கள் சிவனுக்கு உருவாக்கப்பட்டன.

எல்லாவற்றையும் கடந்த ஒரு நிலையில், உள்ள யோகிகள் வெற்றுமேனியில் திருநீறு பூசியநிலையில் கண்டார்கள். எல்லாப்பொருட்களும் எரிக்கப்படும்போது சாம்பலாகவே மாறி விடுகின்றது. பௌதீகப் பிரபஞ்சத்தைக் கடந்து கடவுள் நிலையில் நிற்கும் போது சிவன் பௌதீக சம்பந்த மற்றவராகவே அதனால் எதுவித தாக்கமும் அற்றவராகவே இருக்கின்ற நிலைதான் பரமசிவத்தின் மேலான நிலை. சிவன் மூன்று கொண்டைகளை தலையில் தரித்திருப்பது யோகத்தின் அம்சமாகவே சிவன் இருப்பதைக் காட்டுகின்றது. உடற்சக்தி, மனோசக்தி, ஆன்மசக்தி ஆகிய மூன்றும் யோகநிலையில் ஒன்றிணைந்ததென்பதை விளக்குவதற்கே எனக் கொள்ளப்படுகின்றது. - யோகத்தின் குறிக்கோளே இம்மூன்றும் ஒன்றிணைதல் என்பதே.

சிவன் திருமுடியிலிருந்து கங்கை விழுவது மக்களின் பாபங்களைக் கழுவி, மன இருளை அகற்றி, மக்களின் மாசு அகற்றி ஆட்கொள்வதற்கே. இதனை உவமித்தற் பொருட்டே, வானசாஸ்திரத்தின்படி நல்லபலனை அளிக்கும் சுபமுகூர்த்தமான சம்பவங்கள் இடம்பெறும் காலங்களில் கங்காந்தியிலும், அதனுடன் ஊற்றுச் சம்பந்தமுடைய நதிகளிலும் தீர்த்த ஸ்நானம் செய்தலையும் அதன் பயனகிய பாபநீக்கம், பாபநாசம் பெறுதலையும் இந்துக்கள் பெரும்பேறாகக் கொள்ளுகின்றனர்.

பிறைச்சந்திரனைச் சிவன் தமது ஜடாமுடியின் தரித்திருக்கிறார். இது பிரபஞ்சம் படைக்கப்படுதலையும் பின்பு சிலகால எல்லையின் முடிவில் அழிக்கப்படுதலையும் குறிக்கும். சந்திரனுக்கு வளர்பிறை என்றும் தேய்பிறை என்றும், ஆக்கமும் தேய்வும் பெறுதலும் அமாவாசையில் இருள் சூழ்ந்து இருத்தல் ஒரு சிறிது காலத்தின் பிசிறு ஆகிய அபரபட்ச முடிவு சம்பவிப்பதும் பிரபஞ்ச ஆக்கமும் அழிவையும் விளக்கும். சிவனின் முடி அலங்காரப் பொருளாக துலங்கும். பிறை சிவனுடன் இரண்டறக்கலந்து நிற்கும் ஒன்றல்ல. அதன்தோற்றம் நிலைத்திருப்பதில்லை. வளர்ந்தும் தேய்ந்தும் நிலையற்ற தன்மையைக் கொண்டது.

சிவனுக்கு மூன்று கண்கள் இருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. வலக்கண், சூரியன் என்றும் இடக்கண், சந்திரன் என்றும் நெற்றிக் கண், அக்கினி என்றும் கூறப்படுகின்றது. வலது இடது பக்கக் கண்கள் பௌதிக உலகில் சிவனின் தொழிற்பாடுகளை (சூரிய சந்திரனாக ) விளக்கிக் காட்டுவன. நெற்றிப் புருவ மையத்தில் உள்ள மூன்றாவது நெற்றிக்கண்ஈ ஆன்மிக ஞானத்தையும், சக்தியையும் குறிப்பதால் இந்நெற்றிக்கண் ஞானக்கண், அறிவுசார்ந்த கண் எனப்படுகின்றது.

சிவன் தன்னுடைய கண்களைத் திறக்கும் போது புதிய உற்பத்தி ஆரம்பமாகிறது. பின் சிவன் தன்னுடைய கண்களை மூடும்போது அடுத்த பிரளயத்துக்காக உற்பத்தியாக அனைத்தும் அழிக்கப்படுகின்றன. அரைவாசியாகத் திறந்திருக்கும் கண்களின் நிலையானது கால வெள்ளோட்டத்தில்

உற்பத்தி தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டிருப்பதைக் காட்டுகிறது. யோகியான சிவன் தன்னுடைய சக்தியால் அண்டசராசரத்தை இயக்குகிறான். அரைவாசி திறந்த நிலையில் உள்ள, சிவனது கண்கள் யோகநிலையை உணர்த்தும்.

சிவனின் நெற்றிக்கண் துஷ்டர்களையும், துன்மார்க்கரையும் சுட்டெரிக்கும் தன்மை உள்ளமையால் மூன்றாவது கண்ணாகிய நெற்றிக் கண்ணைக் கண்டு அச்சத்தால் அவர்கள் நடுக்கமுறுகிறார்கள்.

சிவனின் காதுகளில் திகழுங் குண்டலங்களில் ஒன்று உண்மையில் “அலக்ஷிய” (எந்த அடையாளத்தாலும் அறியப்படாதது) “நிரஞ்சன்” (ஊனக்கண்களால் காணமுடியாதது) என்றும் சொல்லப்படுகின்றது.

இவ்வாறான காதணிகலன்கள் சிவனை சாதாரண அறிவுக்கு உட்படுத்தி அறியமுடியாத நிலையை விளக்கும் குறியீடாக உள்ளன. சிவனின் இடது காதில் உள்ள குண்டலம் பெண்கள் அணியும் வகையானதாகவும் வலதுகாதில் உள்ள குண்டலம் ஆண்கள் அணியும் வகையையும் சார்ந்தது. இது சிவனின் ஆண் - பெண் (சிவசக்தி ஐக்கியத்தை) என்ற லிங்கசேர்ந்கையே உற்பத்தியின் ஆதாரம் என்பதைக் காட்டும்

சிவனின் கழுத்தைச் சுற்றியிருக்கும் பாம்பு யோகசக்தியை குறிக்கின்றது. யோகசக்தியினால் சிவபெருமான் பிரபஞ்சத்தை ஆக்கியும் அழிக்கும் வல்லமை பெறுகின்றார். யோகிகள் தமக்கென ஒன்றையும் வைப்பதில்லை. பாம்புகளை காட்டிலும் மலைகளிலும் பன்னெடும் நாட்கள் காற்றைச் சுவாசித்தவாறே, வாசம் செய்யும் ஆற்றலுடையவை. சர்ப்பங்களின் நஞ்சு யோகசக்தியைக் குறிக்கும்.

கழுத்தில் மூன்று சுற்றாகச் சுற்றி அசையும்படி சிவன் அணிந்திருப்பதாகக் கொள்ளப்படும் வாசுகி என்ற பாம்பு, சிவனின் வலது பக்கத்தை பார்த்திருப்பதாக காட்டப்படுகிறது. முக்காலங்களையும் (இறந்த, நிகழ், எதிர்காலங்களை) பாம்பின் மூன்று சுற்றுக்களும் சுட்டுவதாக கருதப்படுகின்றன. காலத்தைக் கடந்து நிற்கும் கடவுள் ஆபரணமாக பாம்பை அணிந்திருப்பது படைப்பு காலச்சுழற்சியில்தான் நடைபெறுகின்றது என்பதையும் சிவன் காலங்களைக் கடந்தவர் என்பதையும் எடுத்துக் காட்டுவதற்கே. இறைவனின் வலது பக்கம் மனிதனின் தொழிற்பாட்டை, தற்கரீதியாகவும், நியாயபூர்வமாகவும், அறிவுமூலமாகவும் நிகழ்வதற்கு அருள்செய்கின்றமையைக் குறிப்பதாக உள்ளது.

சிவனின் ருத்தராட்சமாலை அண்டசராசர விதிகளை எவ்வித பாகுபாடுமின்றி அண்டத்தில் நீதியையும், ஒழுங்கையும் நிலையாக்குவதைக் குறிப்பதை அவர் தம் கழுத்திலும் அங்கங்களிலும் அணிந்துள்ள உருத்திராட்சமாலைகள் எடுத்துக்காட்டுகின்றது. 108 உருத்திராட்சங்களால் அமைந்தமாலை உலகங்களின் படைப்புக்கு இன்றியமையாத 108 மூலகங்களைக் குறிக்கின்றன.

திரிசூலம் சிவனுக்கு உரிய மூன்று மிகப் பிரதானமான சக்திகளாகிய, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்திகளை குறிப்பதுடன்,அழித்தலாகிய தொழிலையும் குறிக்கின்றது. அது மாத்திரமல்லாமல் அஞ்ஞானத்தையும், கல்மசங்களையும் அழிக்கும்.

உடுக்கை (உடுக்கு, தமருகம்) என்னும் வாத்தியம் இரு பகுதிகளை உடையதும், நடுப்பாகம் ஒடுங்கியதாகவும் அமைந்திருத்தல் இயற்கையில் எதிரெதிரான முரண்பட்ட ஆக்கத்தைக் காட்டுகின்றது. உடுக்கு ஒலிக்கும்போது இரு பக்கங்களிலுமிருந்து ஒலி எழுவதால் வெவ்வேறு சப்தம் உண்டாகின்றது. எனினும் இரு ஓசைகளும் எதிரொலித்து ஒன்றிணைந்து உடுக்கின் ஓசை சங்கமமாகின்றமை “ஓம்” என்ற ஓங்கார நாதத்தையே குறிக்கின்றது. நாதமே உற்பத்தியின் தோற்றுவாயாக அமைகிறது.

கமண்டலும் என்பது, காய்ந்த சுரைக்காயின் குடவை, தண்ணீர் எடுத்து வைத்துக்கொள்வதற்கு இதை உபயோகிப்பது மரபு. சிவன் தனது பக்கத்தில் தரையில் வைத்திருப்பதாக காட்டப்படும் கமண்டலத்தில் அமிர்தம் நிறைந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. அதை தயாரிக்கும் முறை ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களைக் கொண்டது. நன்கு முற்றிய கனிந்த சுரக்காய் அதன் காம்பிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. அதனுள் இருக்கும் உள்ளடக்கத்தை நீக்கிய பின் மீதமாகவுள்ள குடுவை சுத்தமாக்கப்பட்டு அமிர்தம் நிரப்பப்படுகிறது. இவ்வாறே ஒருவர் பௌதிக உலக சம்பந்தங்களிலும் ஈடுபாடுகளிலுமிருந்தும் விடுபட்டு தன்னுடைய உள்ளுணர்வாகிய ‘ஆன்மாவை அகங்கார அவாவிலிருந்து பிரித்து எடுப்பதன் மூலமே இறைவனுடன் ஐக்கியமாகலாம்’ எனவும், ‘கமண்டலத்துள் உள்ள அமிர்தமே’ இறைவனின் அன்பைப்பெறும் அனுபவபாக்கியமாகக் குறியீடாகக் காட்டப்பட்டுள்ளது. அதாவது ‘சுரைக்காயின் உள்ளீட்டை நீக்கியபின சுரைக்காயை கமண்டலமாக உபயோகிக்கும்போது அமிர்தமாகிய நீரை அதில் வைத்திருத்தல் ஒருவர் தனது உடலிலிருந்து மனத்தின் தொழிற்பாட்டால் எழும் தன்முனைப்பான ஆசாபாசங்களை நீக்கி பந்தத் தொடர்பறுத்து ஆன்ம தரிசனம் பெறும் பொருட்டு’ என்பதை உணர்த்துவதாக உள்ளது.

நந்தி சிவனின் வாகனமாக கூறப்படுகிறது. எருது அதிக பலமுள்ளதும் முரட்டுத்தன்மையுமுள்ளதுமாகும். சிவன் எருதை வாகனமாகக் கொள்வது, நந்தியாகிய ஆன்மாவின் “பசு” முரட்டுத்தனத்தையும், ஆணவ இருளையும் நீக்கி, எமக்கு செயற்திறனும் ஞானமும் கல்வியும் அருட்கொடையாக அளிப்பதற்காகும். வருஷபம் (இடபம்) சிவனுக்குப் பக்கத்தில் படுத்திருத்தல் எதைக்காட்டுகின்றதென்றால் சிவனே தர்மத்தை நிலைக்கச் செய்பவர் என்னும் உண்மையை காட்ட என்க.

சிவபெருமான் புலியின் உரிதோலை அணிந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. சிவனின் புலித்தோலாடை மறை நிலை சக்தியைக் குறிக்கும். சிவன் புலித்தோலை பூண்டு அதன்மேல் அமர்ந்திருக்கும் நிலையானது, சிவனே இயக்க சக்தியின் மூலாதாரக்காரணமாக, மறைநிலையியில் அண்டசாராசரப் பிரளயத்தின்போது இருப்பதைக் குறிக்கும். சிவன் தன்னுடைய செயற்பாட்டால் மறைநிலை சக்தியை

இயக்கி ஆக்கசக்தியாக்கி வரையறையற்ற கால ஓட்ட வட்டத்தைக் காட்டுகிறான். புலித்தோலின் மேல் யோகநிஷ்டையில் இருப்பதும் அவரே படைப்பின் மூலகாரணர் என்பதும், பிரளயத்தில் அழிவின் மூலகாரணர் என்பதும், தமது சுயமாகிய தன்மையினாலேயே அழிவினை உருவாக்கி பிரபஞ்ச அழிவை உண்டாக்கி, அதன்பின்பு மீண்டும் படைத்தும், தொடர்ந்து காத்தும், முடிவற்ற சுழற்சியில் முத்தொழில்களையும் ஆற்றுகின்றமையை பிறப்பு இறப்பாகிய அழிவற்ற சுழற்சியான தொழில்களுக்கு மூலாதாரண கர்த்தாவாக விளங்குகிறார்.

**சிவனின் மூர்த்தங்கள் (Aspects of Lord Siva)**

சிவன் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார். அவற்றுள் பிரபலமாகிய சிவ மூர்த்தங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| பஞ்சானனசிவன் | : | சில சிவஸ்தலங்களலி ஐந்து முகங்களுடன் சிவன் தரிசனம் தருகின்றார். ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு நிலை (திக்குகளின் பெயரையும் உடையதாகும். |
| ஈசானம் | : | தென்கிழக்குத்திக்கை நோக்கியிருப்பது ஈஸ்வரனது சான்னித்தியத்தை (சாதாக்கியம்)ச் சுட்டுவது - சதாசிவ மூர்த்தம் எனவும் சொல்லப்படுகின்றது. |
| தத்புருஷம் | : | கிழக்குத் திசையை நோக்கியிருப்பது. தனக்கென ஒரு விதமான விருப்பு, வெறுப்பு இல்லாத சாந்த நிலையைக் குறிப்பதாகும். |
| அகோரம் | : | தென்திசையை நோக்கியிருப்பது - பிரளயம் மற்றும் மாற்றீடு செய்யும் ஆற்றலும், பிரபஞ்ச ஆக்கத்துக்கும் உரிய நிலையைக் குறிப்பது. வடவாக்கினியால் உலகை அழித்தும் - பின்னர் பிரபஞ்சத்தை படைக்கும்நிலை. |
| சத்தியோஜாதம் | : | மேற்குத் திசையை நோக்கியிருப்பது உலகில் உயிர்களை நிலைக்க, வாழ தனு கரண, போகங்களை கொடுக்கும் நிலை. |
| அனுகிரக மூர்த்தி | : | பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று அவர்களுக்கு அனுக்கிரகிக்கும் மூர்த்தம் |
| உக்கிர மூர்த்தி | : | உருத்திரன், பைரவர், கங்காளர், சங்காரர் என கோபமான உக்கிரமூர்த்தங்கள் - துஷ்டர்களை அழிக்கும் நிலை. பின்வருவன சில உக்கிரமூர்த்தங்களாகும். |
| கங்காளர் -பைரவர் | : | பிரம்மதேவனின் ஐந்து தலைகளில் ஒன்றை நகத்தால் கிள்ளி, பிரமனின் கர்வத்தை அழித்த மூர்த்தம். |

கஜாசூரவதமூர்த்தி : நீல என்ற அரக்கன் யானையுருவில் வந்தபோது அவனை அழித்து "மதயானை உரிபோர்த்த" தாண்டவநிலை.

திரிபுராந்தக மூர்த்தம் : அந்தகாசூரனின் மூன்று புத்திரர்களாகிய அசுரர்களால் உண்டாக்கிய பொன், வெள்ளி, இரும்பு லோகக்கோட்டைகளை அழித்த மூர்த்தம் (மும்மலங்களை அழிக்கும்நிலை)

சரபேச மூர்த்தம் : நரசிங்கமூர்த்தியின் ஆணவத்தை ஒடுக்க எடுத்த சரப்புள்ளின் தோற்றம்.

கலாரீ மூர்த்தம் : மார்கண்டேயரைக்காக்க, காலனை காலால் உதைத்து அழித்த மூர்த்தம்.

காமாந்தக மூர்த்தி : யோக நி'ஷ்டையில் மன்மதனை அழித்த நிலை காமத்தை ஒழித்தநிலை.

பைரவர் மூர்த்தி : சுடுகாட்டில், தந்திரீக நெறியுளாரால் செய்யப்படும் கிரியைகளில் உபாசிக்கும் மூர்த்தம், ஊர், ஸ்தலம், கிராமம், சேத்திரம் முதலிய இடங்களைப் பாலிக்கும் மூர்த்தம்.

தாண்டவ மூர்த்தம் : நடராஜர் அம்பலவாணர் 108 நடனமூர்த்தி நாட்டிய சாஸ்திரத்தை சாஸ்திரீக முறையில் அருளிய மூர்த்தம் பஞ்சகிருத்தியங்களைக் குறிக்கும், அருள் மூர்த்தம் 9 வகையான நடராஜ மூர்த்தங்கள் சொல்லப்படுகின்றன. நடராஜர், ஆனந்ததாண்டவமூர்த்தி, உமாதாண்டவமூர்த்தி, திரிபுராதாண்டவ மூர்த்தம், திரிபுர சூரதாண்டவமூர்த்தி, உர்த்துவதாண்டவமூர்த்தி என்பவை முக்கியமானவையாகும்.

தட்சிணாமூர்த்தி : சிவனுடைய மூர்த்தி பேதங்களுள் தட்சிணமூர்த்தியும் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. தென்திசை நோக்கிய ஞானிகளுக்கு யோகஞானத்தை உபதேசிப்பதன் காரணமாக இப்பெயர் ஏற்பட்டது. சிவனது இக்கோலம் சிவன் கோயில் கருவறையில் தென்திசையில் வெளிப்புறக்கோட்டத்து மாடத்தில் தெற்குநோக்கி அமையும். கல் ஆலமரத்தின் கீழ் புலித்தோல் போர்த்திய ஆசனத்தின்மேல் அமர்ந்த நிலையில் இம்மூர்த்தம் அமையும் சிற்பத்தின் வலதுகால் கீழே தொங்கிய நிலையிலும் இடதுகால் மடிந்து வலது தொடையின் மேல் பொருந்திய நிலையிலும், இடதுகால் மடிந்து வலது தொடையின்மேல் பொருந்தியவாறு வீரகளைக் கோலத்தில் இருக்கும். கீழே தொங்கும்கால் அபஸ்மார புருஷனின் உடலை மிதித்த நிலையில் அமைவுறும். மூர்த்தியின் முன் வலக்கை ஞானமுத்திரையையும் (சின்முத்திரை, சந்தர்சன முத்திரை, சம்தம்சமுத்திரை) முன் இடக்கை வரத கரமாகவும் அமையும் பின்


வலதுகை அக்கமாலையையும், பின் இடதுகை அக்கினியைத் தாங்கி அமையும். இம்மூர்த்தியின் அடியில் நாரதர், ஜமதக்கிளி, வசிஷ்டர், பிருகு, பாரத்வாசர், சனாகர், அகத்தியர் என்னும் ரிஷிகளும் காணப்படுவர்.

இலிங்கோற்ப மூர்த்தம் : சிவஸ்தலங்களில் கருவறையின் மேற்குத்திசை சுவரின் புறக்கோஷ்டத்தில் மேற்கு நோக்கியவாறு இம்மூர்த்தம் அமையும். ஒருமுறை நான்முகனும், திருமாலும், முறையே படைத்தல், காத்தல் தொழில்களை ஆற்றிவரும் போது தங்களில் யார் பெரியவர்? என வாதிட்டனர். அவ்வேளை ஒரு பேரொலி அடி,முடி, காண முடியாதவாறு தோன்றியது. இவ்வெளிப்பிளப்பின் அடியையோ அன்றமுடியையோ காண்பவரே பெரியவர் என்ற சமரசத்துக்கு வந்தனர். பிரம்மா அன்னப்பட்சி வடிவெடுத்து முடியைக்காணச் சென்றார் விஷ்ணு பன்றி உருவெடுத்து அடியைக் காணச் சென்றார். இறுதியாக இருவரும் அடி முடி காண ஆற்றல் அற்றவர்களாகத் திரும்பினர். அவர்களுடைய கர்வத்தை அடக்க, சிவன் புலனாகி திருவருள் பாலித்தார் என்ற புராணக் கதையின் அடிப்படையை இலிங்கோற்பவ மூர்த்தம் கொண்டது. இலிங்கோற்பவமூர்த்தியின் பரமசிவ ரூபத்தில் சந்திரசேகரமூர்த்தமும் அடி, முடிப்பகுதிகளில் அன்னம் (நான்முகன்), பன்றி (திருமால்) முறையே காணப்படுவர். மேற்குப் புறக் கோஷ்ட பஞ்சர்மானது, கருவறையின் உள்ளுறுப்பாக அமைந்து மூல லிங்கத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டதாகும்.

பிட்ச்சாடனமூர்த்தம் : சிவனுடைய திருக்கோலங்களுள் பிட்சாடனமூர்த்தமும் முக்கியமானதொன்றாகும். சிவனின் இக்கோலம் திகம்பரனாக தாருகாவனம் சென்ற கோலமாகும். இம்மூர்த்தத்தின் இடது கால் தரையில் பதித்து, வலதுகால் நடப்பது போன்ற பாவனையில் வளைந்தும், தளர்ந்தும் அமையும். தலையில் சடாபாரம் அல்லது சடாமண்டலம் விளங்கும் - இடுப்பில் பாம்பைக் கொண்ட சூத்திரமும், மார்பில் முப்புரி நூலும், வலக்காலில் வழுரர்கழலும், பாதங்களில் வேதபாதுகைகளும், நெற்றியில் பட்டமும், முக்கண்களும், கழுத்து நீல கண்டமாதலும், இடது காலில் சங்கபத்திரமும், வலது காதில் குண்டலங்களும் தொங்கும்.

ஹிருதய மூர்த்தம் : இது ஹரியும் சிவனும் ஒன்றாக உள்ள மூர்த்தம். சங்கர நாராயண மூர்த்தம் எனச் சொல்லப்படும் இடப்பாகம் திருமாலுக்கும் வலப்பாகம் சங்கரனுக்குமா அமைந்த மூர்த்தம்.

அர்த்தநாரீஸ்வரமூர்த்தம்: தமது சன்மார்க்க தத்துவத்தையும் பாகத்தில் உலக உற்பத்திக்கு இவ் விரு அம்சங்களும் இன்றியமையாதன என்பதைக் காட்டுவதற்கும் உள்ள மூர்த்தம்.







**சக்தி (அம்மை) -தேவி**

இந்து சமயம் மாத்திரமே தாய்மையைப் பற்றி வலியுறுத்திக் கூறும். ஆகையால் தாயாக, சக்திதேவி யாவருக்கும் யாவற்றுக்கும் தெய்வீக அன்னை. சிவனின் வல்லமை (சக்தி) யாக விளங்குபவள் உமாதேவியார். சக்தியில்லாமல் சிவமும், சிவத்தில் நிலைகொள்ளாமல் சக்தியும் இருப்பதில்லை. சிவமே சக்தியின் உயிர்ப்பு. சக்தி சிவத்துடன் ஒத்திருப்பதால் அபேதமற்று அபின்னமாக இருக்கின்றாள், சக்திக்கு ஆதாரம் சிவம். சிவம் யோக நிஷ்டையில் இருப்பதால் சாந்தமாகவும் அமைதியாகவுமே இருப்பது. உலகமாற்றங்களாலும் வேறெந்த அசைவுகளாலும் தாக்கமின்றி இருப்பது. நடைபெறுவனவற்றை பார்த்துக்கொண்டு - கண்காணித்துக்கொண்டு இருப்பதே சிவத்தின் தொழில். சக்தியே யாவற்றையும் தொழிற்படுத்திக் கொண்டு பிரபஞ்சத்தை நடாத்திக் கொண்டிருப்பவள்.

சக்தியே எல்லாம் வல்ல இறைவி - இறைவனின் வல்லமையாக விளங்குபவள். அவளே பிரபஞ்ச சுழற்சிக்கும் ஓட்டத்துக்கும், மாற்றங்களுக்கும், திரிபுகளுக்கும், காரணியாகவுள்ளது. பத்துக்கரங்களையுடையவளாகவும், தமது கரங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஆயுதத்தை தாங்கியும், சிம்மத்தின் முதுகில் வீற்றிருப்பவளாகவும், சத்துவம், இராஜதம், தாமசம் என்னும் மூன்று குணங்களை தனது வல்லமையால் உண்டாக்கி சிவத்தினை சமநிலையில் - என்றும் மாறாத நிலையில் வைத்திருப்பவளாகவும் உள்ளாள். ஞானம், அறிவு, புத்தி, காமம், சாந்தி, கோபம், பேராவல் ஆணவச்செருக்கு. தற்பெருமை முதலிய அம்சங்களின் ரூபமாகவும் அவள் விளங்குகிறாள். தேவி விருக்தம் என்பது இருக்குவேத சம்ஹிதையில் உள்ளது. அதில் சக்திய வாக்குக்கு அதிபதியென்னும் அகிலலோக நாயகியாகவும், பரமேஸ்வரனின் இணைபிரியாத சக்தியாகவும், எல்லா தேவ, தேவதைகளிலும், எல்லா மனிதர்களிலும் எல்லா உயிரினங்களிலும் உயிரூட்டும் சக்தியாக விளங்குகின்றாள்.

கேன உபநிடதத்தில் காணப்படும் "ய'ப் பிரஜ்னத்தில்" ஐயத்துக்கு இடமின்றி, சக்தியே இந்திரனுக்கு புத்தியையும் சக்தியையும் நல்கி சிவத்தின் அருளினால் அரக்கர்களையும் பூதங்களையும் அழிக்க

உதவினாள் என்று கூறப்பட்டுள்ளது. தன்னை அறிதல் ஆகிய அறிவை அறிந்து கொள்ள அன்னையே வழிகோலுகிறவளாவள். பகதர்களுக்கு அறிவும் புத்தியும் தருபவள் சக்தியே.

கடவுளர்களுக்கும் உமையாகிய சக்திதேவி சத்தியத்த போதித்தான். இறைவனின் தன்னுணர்வு - உள்ளுணர்வு சக்தி. தேவி, சக்தி என்னும் சொற்கள் பற்பல உருவங்களையும் நாமங்களையும் குறிப்பதாக இருந்தாலும் அவை மனிதனுடைய அல்லது யோகிகளின் புத்தியின் அதிஉயர் எல்லையின் முடிவின் தெரிவுதான் எனலாம். ஆதிசக்தி மனிதனின் அறியும் ஆற்றலையும் மிஞ்சி உயர்ந்து இருக்கும் சக்தி. உபநிடதம் கூறுவது பின்வருமாறு அறிவு, பலம், செய்திறன் என்னும் மூன்று நிலையில் இறைவியின் சக்தி வெளிப்படுவதாகக் கொள்ளப்படுகின்றது.

சக்தியின் கருணையோ மிகப்பெரியது. அவளது இரக்க உணர்வு எல்லையற்றது. அவளுடைய ஞானத்துக்கு வரம்பே இல்லை. அவளின் வல்லமை - ஆற்றல் அளவிடுதற்கு அரியது. சக்தியின் புகழ் பற்றி வார்த்தைகளால் சொல்வது முடியாததாகும். சக்தியே எமக்கு ஆன்மவிடுதலையை அருளுபவளாகிறாள்.

